மாண்புமிகு திரு மு. கருணாநிதி : லாரி உரிமையாளர்களுக்கும், விபத்துக்களுக்கும் சம்பந்தமில்லை. அது லாரிகளை ஓட்டுகிற ஓட்டுனர்கள், அதாவது டிரைவர்களைப் பொறுத்த விஷயம்.

திரு கே. ராமதாஸ்: குறிப்பாக லாரி விபத்துக்கள்தான் அதிகமாக இருக்கின்றன. நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கூட சமீபத்தில் ஒரு விபத்திற்கு ஆளாகியிருக்கிறார். டிரைவர்கள் உபயோகிக்கும் **accelerator** கள் நல்ல " கண்டிஷனில் " டி.வி.எஸ். வண்டிகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. அதே போன்ற நிலைமை எல்லா லாரிகளுக்கும் இருந்தால் சுலபமாக இருக்கும். விபத்துக்களும் குறையும். ஆகவே, அதற்கான திட்டம் ஏற்படுத்த சர்க்கார் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : டி.வி.எஸ். பஸ்ஸிற்கு வைத்து இருப்பதை, அதாவது சட்டத்திற்குள் நிர்ணயிக்கப்பட்ட வேகத்தை மீறி கார் ஓட்டினால் அதைச் காட்டிக் கொடுப்பதற்கான கருவி பொருத்தப்பட்டு இருப்பதைப் போல நம்முடைய அரசாங்கப் போக்கு வரத்து பஸ்களில் வைக்க யோசித்துக்கொண்டிருக்கிறோம். மற்ற லாரிகளுக்கும் வைக்க வேண்டுமானால் உத்தரவாகத்தான் போட வேண்டும்.

திரு. சி. வி. ராசகோபால் : இந்த ஸ்கூட்டர்களில் குடும்பத்தோடு செல்கிறார்கள். மனைவியையும், குழந்தைகளையும்குட்டிகளையும் அழைத்துக் கொண்டு போகிறார்கள். அதனால் விபத்திற்கு ஆளாகும்போது எல்லோரும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, குழந்தைகளையும், குடும்பத்தையும் காப்பாற்ற வேண்டியாவது, ஸ்கூட்டர்களில் அவர்கள் மட்டும்தான் செல்ல வேண்டும், குடும்பத்தை அழைத்துச் செல்லக் கூடாது என்று சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : பாதுகாப்பிற்காகத் தொப்பி போட வேண்டுமென்று சொல்லும்போதே எதிர்ப்பு வரும்போது, இதைக் கட்டுப் படுத்த முடியுமா என்பது பற்றி யோசிக்க வேண்டும்.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTHY : Will the Government see that all the lorry drivers are changed every six hours and alternative drivers provided ? I believe that statue provides for it, and I do not know whether this is carried out actually.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அப்படித்தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஷிப்ட் முறையில் டிரைவர்கள் வைத்திருந்தால், களைப்பில்லாமல் ஓட்ட முடியும். உரிமையாளர்கள் பாதுகாப்பாக இருந்து கவனிப்பு கொடுத்து வந்தால், நாட்டின் நலன் கருதி விபத்துக்களைத் தடுக்க முடியும்.

Palayamkottai Tourist Bungalow

188. *Q.*—**THIRU N.R. THIAGARAJAN :** Will the Hon. the Minister for Works be pleased to state :

(*a*) whether the rent for the tourist bungalow in Palayamkottai, Tirunelveli district was reduced recently ; and

(*b*) if so, whether there is any proposal to reduce the rent for tourist bungalows in other places likewise ?

பாளையங்கோட்டை சுற்றுலாப் பெருமாளிகை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) திருநெல்வேலி மாவட்ட பாளையங்கோட்டை சுற்றுலாப் பெரு மாளிகையின் வாடகை அண்மையில் குறைக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், ஏனைய இடங்களிலுள்ள சுற்றுலாப் பெருமாளிகையின் வாடகையையும் இதைப் போன்று குறைக்கும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : பாளையங்கோட்டையில் மட்டும் சுற்றுலா மாளிகையில் சார்ஜ் குறைக்கப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களில் குறைக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? மற்ற இடங்களிலும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த யோசனை பரிசீலிக்கப்படும்.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTHY: On the Southern Trunk Road, there are quite a few tourist bungalows, but most of the time, they are found occupied by officials and are not available for others for having their lunch. There are no facilities there like wash rooms and dining rooms. Will the Government, specially in the interest of tourism, see that one wash-room and one dining room are kept at the disposal of the tourist ? They may be charged a nominal fee.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதில் தங்குவோருக்கான வரிசைப் பட்டியல் இருக்கிறது. அந்த வகையில் அமைச்சர்களும் மற்றவர்களும் தங்கிக்கொண்டிருக்கிறார்கள். அம்மையார் கூறிய யோசனை பரிசீலனைக் குரியது.

திரு. கே. ராமதாஸ் : வாடகையைக் கட்டுப்படுத்துவதைப் போன்று மற்றொன்றும் செய்ய வேண்டும். சுற்றுலா மாளிகைகளில் உள்ள சிற்றுண்டிச் சாலைகளில் கொடுக்கப்படும் பகல் உணவு ஒன்றுக்கு ரூ. 7½ கட்டணம் வசூலிக்கப்படுகிறது. விலைவாசி ஏற்றம் என்று அதற்குக் காரணம் சொன்னாலும் கூட சுற்றுலா செல்கிறவர்களுக்குக் குறைந்த விலையில் உணவு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உறுப்பினரைப் போன்றவர்கள் தங்கும்போது, மற்றவர்கள் அவர்களுக்குச் சாப்பாடு போட்டுவிடுவார்கள். ஆகவே அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.

Price of paddy

*189 *Q.*—THIRU **N. R. THIAGARAJAN**: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the reasons for fixing the price of paddy at a rate lower than Rs. 45 per quintal in Madras when it was fixed as Rs. 56–25 in Bihar, Kerala, Uttar Pradesh, West Bengal, and Madhya Pradesh; and

(*b*) whether by way of incentive the Madras Government propose to increase the price of paddy ?

நெல் விலை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) பீஹார், கேரளம், உத்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம், ஆகிய மாநிலங்களில் குவிண்டால் நெல் விலை ரூ. 56.25 ஆக நிர்ணயித்துள்ளபொழுது, தமிழகத்தில் ரூ. 45–க்கும் குறைவாக நிர்ணயித்த காரணம் என்ன ?